உ
சிவமயம்







### மெல்பேண் சண்ஷைன் நகரில் வீற்றிருக்கும்

# அருள்மிகு மெல்பேண் முருகன் ஆலய

## புனராவர்த்தன பிரதிஷ்டா

# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!



முருகன் அடியார்களே!

நிகழும் சர்வமங்களம் நிறை விசுவாவசு ஆண்டு தை மாதம் **25**ம் நாள் **(08/02/2026)** ஞாயிற்றுக்கிழமை சஷ்டி திதியும், சுவாதி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை **9.41** முதல் **11.41** வரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில் மெல்பேண் சண்ஷைன் பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் முருகப் பெருமானுக்கும், விநாயகர் முதலான ஏனைய தெய்வங்களுக்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நிகழ்த்த முருகன் திருவருள் பாலித்துள்ளார். அவ்வமயம் அடியார்கள் எம்பெருமானைத் தரிசித்து திருவருள் பெற்று நிறைவாக வாழுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## நாள்: 08-02-2026 ஞாயிற்றுக்கிழமை
## நேரம்: காலை 9.41 முதல் 11.41 வரை

**மெல்பேண் முருகன் ஆலயம்**
**Melbourne Murugan Temple**
**17-19 Knight Avenue,**
**Sunshine North VIC 3020**

**Phone:** (61) 3 9367 3080
**Mobile:** (61) 420 307 976
**Email:** melbournemurugan@gmail.com
**Website:** https://melbourne-murugan.org
**Facebook:** Melbourne Murugan Temple

கந்தனை வந்தனை செய்து இறையருள் பெறுவோம் வாரீர்!

நன்றி

- ஆலய நிர்வாகத்தினர்

# மகா கும்பாபிஷேக கிரியா நிகழ்ச்சிகள்

## 04-02-2026 புதன்கிழமை

**காலை 7.30 மணி முதல்:** கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம். விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, கணபதி ஹோமம், கிராம சாந்தி, பிரவேச பலி, இரட்சோக்கின ஹோமம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம், அபிஷேகம், தீபாராதனை, திருமுறை ஓதுதல், பிரசாதம் வழங்கல்.

**மாலை 5.30 மணி முதல்:** மூலாதார கணபதி பூஜை, பிரசன்ன அபிஷேக பூஜை, யாக பூஜை, கடஸ்தாபனம், கலா கர்ஷணம், யாத்ரா தானம், ஷண ஹோமம், கும்பம் யாகசாலை பிரேவசம், வேதிகா பூஜை, கலச ஸ்தாபனம், யந்திர ஸ்தாபனம், பிம்ப ஸ்தாபனம் (சுவாமி பிரதிஷ்டை), அஷ்டபந்தனம், அக்கினி வழிபாடு, திருமுறை ஓதுதல், தீபாராதனை, பிரசாதம் வழங்கல்.

## 05-02-2026 வியாழக்கிழமை

**காலை 9.00 மணி முதல்:** இரண்டாம் கால யாக பூஜை, புண்ணியாக வாசனம், விநாயகர், முருகன், சிவன் யாக பூஜைகள், ஏனைய மூர்த்தி கும்பங்கள் பூஜை, அக்கினி வழிபாடு, பிரசன்னா அபிஷேகம், முருகன் யாக நாம ஹோமம், தீபாராதைன, அஷ்டோத்திர அர்ச்சைன, திருமுறை, தேவார பாராயணம், பிரசாதம் வழங்கல்.

**மாலை 6.00 மணி முதல்:** மூன்றாம் கால யாக பூஜை, புண்ணியாகவாசனம், யாக பூஜைகள், முருகன் யாக அக்கினி வழிபாடு, திரிசதி நாம ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதைன, பிரசாதம் வழங்கல்.

## 06-02-2026 வெள்ளிக்கிழமை

**காலை 9.00 மணி முதல்:** நான்காம் கால யாக பூஜை, வேத பாராயணம், யாக பூஜை, பிரசன்னா அபிஷேகம், அக்கினி வழிபாடு, மாலா மந்திர ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதைன, பிரசாதம் வழங்கல்.

**எண்ணெய்க் காப்பு: காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை சுவாமிக்குப் பக்தர்கள் எண்ணெய் சாத்துதல்.**

**மாலை 6.00 மணி முதல்:** ஐந்தாம் கால யாக பூஜை, யாகபூஜைகள், திருமுறை ஓதுதல், யாக அக்கினி வழிபாடு, மூலமந்திர ஹோமம், தீபாராதனை, சண்முகார்ச்சனை, திருமுறை ஓதுதல், கலை நிகழ்ச்சி, பிரசாதம் வழங்கல்.

## 07-02-2026 சனிக்கிழமை

**காலை 9.00 மணி முதல்:** ஆறாம் கால யாக பூஜை, விசேஷ சந்தி, பூதசுத்தி, யாகபூஜை, பிரசன்னா அபிஷேகம், அக்கினி வழிபாடு, விசேஷ திரவிய ஹோமம், யாக தீபாராதனை, கலைநிகழ்ச்சி, பிரசாதம் வழங்கல்.
**எண்ணெய்க் காப்பு: காலை 8.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை சுவாமிக்குப் பக்தர்கள் எண்ணெய் சாத்துதல்.**
**மாலை 5.00 மணி முதல்:** ஏழாம் கால யாக பூஜை, புண்ணியாகவாசனம், விம்பசுத்தி கும்ப பூஜை, வேத பாராயணம், திருமுறை பாராயணம், யாகபூஜை, பூர்வ சந்தானம், பச்சிம சந்தானம், யாக தீபாராதனை, பிரசாதம் வழங்கல்.

## 08-02-2026 ஞாயிற்றுக்கிழமை

**காலை 7.00 மணி முதல்:** எட்டாம் கால யாக பூஜை, புண்ணியாகவாசனம், யாகபூஜைகள், அக்கினி ஆராதனை, பரிவார யாகங்கள் பூர்ணாகுதி, முருகன் யாக மகா பூர்ணாகுதி, உபசார பூஜை, மகா தீபாராதனை, வேத பாராயணம், தேவார பாராயணம்.

**காலை 9.41 மணியளவில்:** விமான கும்பாபிஷேகம், தொடர்ந்து கும்பங்கள் வீதியுலா வந்து 10.30 மணி முதல் விநாயகர், முருகன், சண்முகர், சிவன், அம்மன் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம், மங்கள தரிசனம், மங்கள நீர் தெளித்தல், மகா அபிஷேகம், தீபாராதனை, பிரசாதம் வழங்கல், மகேஸ்வர பூஜை

**மாலை 7.00 மணி முதல்:** விசேட பூஜைகள், சுவாமி வீதி உலா வருதல்.

## சிறப்பு நிகழ்ச்சிகளின் சுருக்கம்

**04/02/2026** புதன்கிழமை மு.ப. 7.30 கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்
**04/02/2026** பி.ப. 6.00 கலச ஸ்தாபனம், யந்திர ஸ்தாபனம், பிம்ப ஸ்தாபனம் ~ சுவாமி பிரதிஷ்டை செய்தல்)
**06/02/2026** வெள்ளிக்கிழமை மு.ப. 8.00 முதல் இரவு 8.00 வரை: அடியார்கள் **எண்ணெய்க் காப்பு** சாத்துதல்.
**07/02/2026** சனிக்கிழமை மு.ப. 8.00 முதல் பி.ப.1.00 வரை: அடியார்கள் **எண்ணெய்க் காப்பு** சாத்துதல்.
**08/02/2026** ஞாயிற்றுக்கிழமை காலை 9.41 முதல் 11.41 வரை **கும்பாபிஷேகம்.**
**09/02/2026** முதல் **28/03/2026** வரை 48 தினங்கள் **மண்டலாபிஷேகம்** நடைபெறும்.
(அடியார்களிடமிருந்து மண்டலாபிஷேக உபயங்கள் வரவேற்கப்படுகின்றன.)
**28/03/2026** சனிக்கிழமை மு.ப. 9.00 மணி முதல் **சங்காபிஷேகம்**. மாலை 6.00 மணியளவில் **திருக்கல்யாண உற்சவம்,** சுவாமி வீதி உலா வருதல், மகேஸ்வர பூஜை

**அவுஸ்திரேலியாவில் வாழும் தலைசிறந்த சிவாச்சாரியார்களால் மகா கும்பாபிஷேக கிரியைகள் அனைத்தும் நடைபெற உள்ளன.**

**கந்தனை வந்தனை செய்து இறையருள் பெறுவோம் வாரீர்!**

நன்றி

- ஆலய நிர்வாகத்தினர்